Tamil

Maryland Developmental Disabilities Council
EMPOWERMENT · OPPORTUNITY · INCLUSION

UNIVERSITY of MARYLAND
SCHOOL OF SOCIAL WORK

# வளர்ச்சி குறைபாடுகள் உள்ள குழந்தைகளை வளர்ப்பது குறித்து மேரிலாந்து ஆசிய அமெரிக்க பராமரிப்பாளர்களின் கண்ணோட்டங்கள்

**மேரிலாந்து வளர்ச்சி குறைபாடுகள் கவுன்சில் மற்றும் மேரிலாந்து பல்கலைக்கழக சமூகப் பணி பள்ளிக்கூடத்தின் ஆதரவுடன் நடத்தப்பட்ட தேவைகள் குறித்த மதிப்பீடு**

நாங்கள் ஒரு தகுதியற்ற சமூகம் - ஆசிய குழந்தைகள் "புத்திசாலி" என்பதை விட குறைவாக இருக்கும் என்பதை யாரும் நம்பவில்லை.

## முக்கிய கணக்காய்வு முடிவுகள் மற்றும் பரிந்துரைகள்

வளர்ச்சி குறைபாடுகள் உள்ள குழந்தைகளைப் பராமரிப்பவர்கள் அவர்களின் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு பல அமைப்புகளைப் பயன்படுத்த வேண்டும், ஆனால் ஆசிய அமெரிக்க குடும்பங்களின் குறிப்பிட்ட தேவைகளைப் பற்றி எங்களுக்கு அதிகம் தெரியாது. சீனர், கொரியர், இந்தியர், ஜப்பானியர், வியட்நாமியர், பிலிப்பைன்ஸ் மற்றும் பங்களாதேஷியர் என அடையாளம் காணப்பட்ட 73 பெற்றோர்களிடம் நாங்கள் கணக்காய்வு செய்தோம். அவர்களின் குழந்தைகளுக்கு மன இறுக்கம், கவனக் குறைப்பாடு மிகைச் செயல்பாட்டு கோளாறு, டவுன் சின்ரோம் அல்லது பிற அறிவு சம்பந்தமான குறைபாடுகள், வளர்ச்சி குறைபாடுகள் இருந்தன.

---

### (1) சாத்தியமான வளர்ச்சி தாமதங்கள் குறித்து பெற்றோரின் கவலையைக் கேட்டறிந்து, குழந்தைகளைக் கண்காணித்து, பரிந்துரைக்க விரைவாக செயல்படவும்.

தங்கள் குழந்தைக்கு ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி தாமதங்களைக் கவனிப்பதற்கும், அவர்களின் நோயைக் கண்டறிவதற்கும் இடையே சராசரியாக 12 மாதங்கள் எடுத்ததாக பெற்றோர்கள் தெரிவித்தனர். பெரும்பாலான பெற்றோர்கள் சுகாதார வல்லுநர்களிடம் தங்கள் கவலைகளைப் பற்றி சொன்னார்கள், ஆனால் மூன்றில் ஒரு பங்கு வல்லுநர்கள் மட்டுமே வளர்ச்சி சம்பந்தமான கண்காணிப்பை மேற்கொண்டனர் அல்லது குழந்தையை நிபுணரிடம் பரிந்துரைத்தனர்.

நான் பலமுறை என்னையே கேட்டுக்கொண்டேன்*:* நான் சீக்கிரமே இதனை அறிந்து, முன்பே என் மகளை சிகிச்சைக்கு அழைத்துச் சென்றால் என்னவென்று*?*

---

நான் *[வளர்ச்சி குறைபாடு]* சமூகத்தில் மிகவும் சுறுசுறுப்பாக செயல்படுபவர் ... பல *[ஆசிய பெற்றோர்கள்]* வளங்கள் மற்றும் தகவல்களுக்காக என்னை நம்பியிருக்கிறார்கள்.

### (2) பெற்றோர்களை தங்கள் சொந்த சமூகத்தைச் சேர்ந்த வழக்குரைஞர்களுடன் இணைந்திடச் செய்யவும்.

பெரும்பாலான பெற்றோர்கள் பெற்றோர் வழக்குரைஞர்களிடமிருந்து சேவைகளைப் பெறவில்லை, ஆனால் பெற்றோர் வழக்குரைஞர்களைக் கண்டறிந்தவர்களில் 71% பேர் தகவல் மற்றும் ஆதரவின் பயனுள்ள ஆதாரங்களாக இருக்கிறார்கள்.

---

### (3) சேவை அணுகலுக்கான முக்கிய தடைகளை குறைக்கவும்.

பல் பராமரிப்பு மற்றும் ஓய்வு பராமரிப்பு போன்ற சில சேவைகள் பொதுவாக பயன்படுத்தப்படவில்லை. மேலும், பெற்றோர்களில் கிட்டத்தட்ட பாதி பேர் சில சிகிச்சைக்கான சேவைகளுக்கு அதிகப்படியாக பணம் செலுத்தியிருக்கிறார்கள். ஆங்கிலம் பேசாத பெற்றோருக்கு தங்கள் குழந்தையின் வழங்குநர்களிடம் தொடர்புகொள்வதும், அவர்களின் உதவியைப் பெறுவதும் கூடுதல் சவாலாக இருந்தன.

சலுகைகளைப் பற்றிய தகவல்களைக் கண்டுபிடித்து விண்ணப்பிப்பது கடினம் .... அதற்காக நீங்கள் மொழி ஆதரவை *[எனது சொந்த மொழியில்]* வழங்கினால் அது உதவியாக இருக்கும். விரிவான மருத்துவ செலவுகள் காரணமாக நான் அதிகமாக உணர்கிறேன் ...

---

எனது குழந்தைகளுக்கு பாகுபாட்டை விட சகிப்புத்தன்மையை வழங்க சமூகத்தில் உள்ளவர்களுக்கு உதவி தேவை.

### (4) வளர்ச்சி குறைபாடுகள் குறித்த சமூக விழிப்புணர்வை அதிகரித்தல்.

பல பெற்றோர்கள் தங்கள் சமூக உறுப்பினர்கள் தங்கள் குழந்தைக்கும் குடும்பத்திற்கும் உதவ முயற்சிக்கிறார்கள் என்று கூறினாலும், 65% பேர் தங்கள் சமூகத்தினருக்கு வளர்ச்சி குறைபாடுகள் குறித்த தகவல்களோ அல்லது அறிவோ இல்லை என்பதாக உணர்ந்தனர். சில பெற்றோர்கள் தங்கள் சமூக உறுப்பினர்கள் பின்வருமாறு இருப்பதாக உணர்கிறார்கள்: (அ) வளர்ச்சி குறைபாடுகள் உள்ளவர்கள் "அதிலிருந்து வளர்வார்கள்" என்று நினைக்கிறார்கள்; (ஆ) தங்கள் குழந்தைகள் அவர்களைச் சுற்றி இருப்பத்திற் சங்கடமாக இருக்கிறார்கள்; (இ) மோசமான குறைபாடு அல்லது ஒழுக்கமின்மை ஆகியவற்றின் காரணமாகவளர்ச்சி குறைபாடுகள் இருப்பதாக உணர்கிறார்கள்; அல்லது (ஈ) தங்கள் குழந்தைகள் பற்றி விவரிக்க புண்படுத்தும் சொற்களைப் பயன்படுத்துகிறார்கள்.

---

### (5) ஒவ்வொரு குடும்பத்தினதும் அவர்களின் இன சமூகத்தினதும் பலத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

பெற்றோர்கள் விவரித்த சவால்கள் இருந்தபோதிலும், 79% பேர் தங்கள் குழந்தையின் பலத்தையும் அங்கீகரித்ததாகக் கூறினர். உள்ளூர் சமூகங்கள் மற்றும் நிறுவனங்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் பிற வழக்குரைஞர்கள் சமூக வாழ்வின் அனைத்து பகுதிகளிலும் வளர்ச்சி குறைபாடுகள் உள்ள குழந்தைகளையும் அவர்களது குடும்பத்தினரையும் அங்கீகரித்து, சேர்க்கும் முயற்சிகளில் முக்கியமான துணையாளர்களாக இருக்கலாம்.

*[என் மகன்]* அவன் அப்படிதான், நான் அதை உலகத்திற்காக மாற்ற மாட்டேன். நான் தொடர்ந்து அவனுக்கு துணையாக இருந்து, உதவி செய்தால் - அவர் அசத்தலான விஷயங்களை செய்து வெற்றி பெறுவார் என்று நினைக்கிறேன்..

---

**மேலும் அறிய எங்கள் பேஸ்புக் பக்கத்தைப் பார்வையிடவும்:**
**https://www.facebook.com/MarylandAANS/**

**மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்: சாரா தபப்னா, இணை பேராசிரியர், மேரிலாந்து பால்டிமோர் பல்கலைக்கழகம்**

Sarah Dababnah, PhD, MPH, MSW
Associate Professor, University of Maryland, Baltimore;
sdababnah@ssw.umaryland.edu

சமூக வாழ்விற்கான அமெரிக்க நிர்வாகம், சுகாதாரம் மற்றும் மனித சேவைகள் துறை, வாஷிங்டன், டி.சி. *20201* ஆகியவற்றின் மானிய எண் சி.எஃப்.டி.ஏ *93.960* மானியம் மூலம் இந்த சமூக திட்டம் பகுதியளவு உதவியினை பெற்றது. அரசாங்க நிதியுதவியுடன் திட்டங்களை மேற்கொள்ளும் மானியதாரர்கள் தங்கள் கண்டுபிடிப்புகள் மற்றும் முடிவுகளை சுதந்திரமாக வெளிப்படுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள். எனவே, கண்ணோட்டங்கள் அல்லது கருத்துகள் அதிகாரப்பூர்வ *ACL* கொள்கையை பிரதிபலிக்காது.